செய்தி வெளியீடு எண்: 333 நாள் :09.07.2015

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு கே.சி. வீரமணி அவர்களின் தலைமையில் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களின் பணிஆய்வுக் கூட்டம் இன்று (09.07.2015) சென்னை, எழும்பூர் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் மற்றும் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் அவர்களும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்து அறிவுரைகளை வழங்கினார். மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் மதுரையில் கட்டப்பட்டுவரும் உலகத் தமிழ்ச் சங்க பெருந்திட்ட வளாகத்தில் பூங்கா அமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், தோட்டம் அமைத்தலில் தமிழ் வளர்ச்சித் துறையின் பங்களிப்பு குறித்தும் வலியுறுத்தினார்.

‘‘உலகத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் அனைத்துக் கூட்டங்களிலும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் கலந்துகொள்ள வேண்டும். தமிழில் உள்ள சிறந்த நூல்கள் பிற மொழிகளுக்கும் பிற மொழிகளிலுள்ள சிறந்த நூல்களை தமிழ் மொழிக்கும் மொழிபெயர்க்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த காலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழின் சிறப்பை உலகளவில் எடுத்துச் செல்ல ஏராளமான திட்டங்களை அளித்து அத்திட்டங்களை மிகுந்த ஈடுபாடுடன் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் அம்மா அவர்கள் செயற்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை கேட்பதையெல்லாம் அள்ளித் தந்துகொண்டிருக்கிறார். இத்துறைக்கு தேவையான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி பெற்றுத் தருவதில் உறுதுணையாக இருப்பேன்’’ என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர் பணியாளர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் மற்றும் அரசு செயலாளர் அவர்கள் தனது ஆய்வு அறிவுரையில் கேட்டுக் கொண்டார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**